# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 105/ந/2018

ஆணை எண். 125/2018

நாள் : 21/05/2018

திரு மா. கன்னிமுத்து,
பழனி. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பழனி நகராட்சி,
பழனி. – எதிர் மனுதாரர்

பழனி, 4–வது வார்டு, எண்.68/38, இராஜாஜி சாலை முகவரியில் வசிக்கும் திரு மா.கன்னிமுத்து அவர்களின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.05.2018 அன்று பெறப்பட்டு, 105/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

பழனி, 4–வது வார்டு, எண்.68/38, இராஜாஜி சாலை முகவரியில் வசிக்கும் திரு மா.கன்னிமுத்து என்பவர், பழனி நகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி 30.06.2008–ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், தனது பணிக்காலத்தில் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி மற்றும் சிறப்பு சேமநல நிதிக்கான வட்டித் தொகை மற்றும் ஐந்தாவது, ஆறாவது ஊதியக்குழுவிற்கான நிலுவைத் தொகையினை வழங்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின் போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவது குறித்து மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைக் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். எனவே, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு,

சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்கக்கோரும் மனுவினை உரிய ஆவணங்கள் மற்றும் தேவையான விவரங்களுடன் பழனி நகராட்சி ஆணையருக்கு மனுச் செய்யுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

3. முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்படும் / பெறப்பட்ட மனுவினை உரிய ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து, அவரது பணி விவரங்களை பரிசீலனை செய்தும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலைப் பெற்றும் சேமநலநிதி வட்டித் தொகையினை வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி **பழனி நகராட்சி ஆணையருக்கு** அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், ஐந்தாவது மற்றும் ஆறாவதுரு ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் முறையீட்டு மனுதாரருக்கு நிலுவைத் தொகைகள் ஏதேனும் வழங்கப்படவேண்டியிருப்பின் அத்தொகையினையும் வழங்க பரிசீலிக்கும் படி அறிவுறுத்தப் படுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, மே திங்கள், **21**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

21/5/18

20.5

29/5/18

பெறுநர்

1. **மா. கன்னிமுத்து,**
**எண்.68/38, ராஜாஜி ரோடு,**
**4–வது வார்டு, பழனி,**
**திண்டுக்கல் மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
**பழனி நகராட்சி,**
**பழனி.**

3. **நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,**
**நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,**
**மதுரை.**

4. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
**நகராட்சி நிர்வாக ஆணையரகம்,**
**சேப்பாக்கம், சென்னை – 600 005.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**